රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**Ministry of Public Administration, Provincial Councils and Local Government**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,இலங்கை. **Independence Square, Colombo 07, Sri Lanka**

| | | | |
|---|---|---|---|
| දුරකථන / தொலைபேசி / Telephone: 011-2696211-13, 011-2166000 | ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2695279 | ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail: info@pubad.gov.lk | වෙබ් අඩවිය / இணையத்தளம் / website: www.pubad.gov.lk |


| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No: Pns/P8/02/19 | ඔබේ අංකය / உமது இல / Your No: | දිනය / திகதி / Date: 2025.09.15 |

அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்,

## 2025 தேசிய ஓய்வூதியர் தினத்தை கொண்டாடுதல்

அரச சேவைக்காக பல்வேறு துறைகளின் மூலம் பெரும் சேவையொன்றை நிறைவேற்றி ஓய்வு பெறும் சிரேஷ்ட பிரஜைகளின் பங்களிப்பினை நினைவூட்டும் தேசிய ஓய்வூதியர் தினம் ஒக்தோபர் மாதம் 08ஆந் திகதிக்கு அமைந்துள்ளது.

02. “சிறந்த பலம், சுகாதாரம் மற்றும் தைரியம்” கொண்ட வாழ்வு எனும் தொனிப்பொருளின் கீழ் இம்முறை ஓய்வூதியர் தினம் கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், **பிரதான கொண்டாட்டம் 2025 ஒக்தோபர் மாதம் 08 ஆந்** தினம் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் தலைமையில் களனிய வெதமுல்ல ஓய்வூதியர் விடுமுறை இல்லத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

03. அதற்கு இணைந்த வகையில் **2025 ஒக்தோபர் மாதம் 06 ஆந் தினத்திலிருந்து 10 வரையிலான வாரத்திற்குள்** பின்வரும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவிக்கின்றேன்.

i. தங்களின் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரஜைகளுக்கு சமூக, கலாசார, சுகாதாரம் போன்று ஆன்மீக ரீதியான பெறுமதியொன்றை வழங்கக்கூடிய விதமான நிகழ்ச்சியொன்றை/ நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடாத்துதல்.

ii. எதிர்காலத்தில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு எதிர்பார்க்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஓய்வு பெறுவதற்குரிய முன் நடவடிக்கைககளை செய்தல் மற்றும் ஓய்வு காலத்தை திட்டமிடல் தொடர்பில் அவர்களை விழிப்புணர்வூட்டல்.

04. இது தொடர்பில் தாங்கள் நல்கும் ஒத்துழைப்புக்கு நன்றி பாராட்டுகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார

செயலாளர்

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதி : அனைத்து மாவட்ட செயலாளர்கள் - தயவுடன் தகவலுக்காக மற்றும் ஏற்ற ஏற்ற நடவடிக்கைககளுக்காக